பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 09 2024 6 45
சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று அதிகாலை அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகள் 5 பேரை நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.
- தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் அரசுத் துறைகளில் 68 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் வேலைதேடிச் செல்பவர்கள் அயலக வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- செஸ் ஒலிம்பியாட் போட்டியின் புள்ளிப் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குவாட் உச்சி மாநாடு மற்றும் ஐநா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக 3 நாள் பயணமாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

இன்று அதிகாலை அமெரிக்கா புறப்பட்ட அவர், டெலாவேரில் நடைபெறவுள்ள நான்காவது குவாட் தலைவர்களின் உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

நியூயார்க்கில் நாளை இந்திய சமூகத்தினரிடையே அவர் உரையாற்றவுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர். உயிரி தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடவுள்ளார்.

நாளை மறுநாள் நியூயார்க்கில் நடைபெறும் ஐநா பொதுச் சபைக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகள் 5 பேரை நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

கூடுதல் நீதிபதிகள் திருமதி விக்டோரியா கௌரி, திரு. **P.B.** பாலாஜி, திரு. கே.கே. ராமகிருஷ்ணன், திருமதி ஆர். கலைமதி, திருமதி திலகவதி ஆகியோர் நிரந்தர நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் அரசுத் துறைகளில் 68 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அடுத்த 2 ஆண்டுகளில் 75 ஆயிரம் இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் பணியமர்த்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப்-4 பணியிடங்கள் மேலும் அதிகரிக்கப்படும் எனவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் வேலைதேடிச் செல்பவர்கள் மாநில அரசின் அயலக வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பதிவு செய்வதன் மூலம் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றார்.

<<<<>>>>

அம்மா உணவகங்களை மூடாமல், அவற்றில் தரமான உணவுகளை வழங்க வேண்டும் என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் அஇஅதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல நல்ல திட்டங்களை திமுக அரசு முடக்கியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஏழை, எளிய, தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்கள் பெரிய அளவில் பயன் அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சென்னை ஆலந்தூர் அருகே உள்ள அம்மா உணவகத்தில் அரசு பள்ளி இயங்கி வருவதாக தகவல் வந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக அம்மா உணவகங்கள் உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆலந்தூரில் உள்ள அம்மா உணவகத்தை முழுமையாக நடத்தவும், அரசு பள்ளி மாணவர்களுக்கு வேறொரு பாதுகாப்பான இடத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே ஆலந்தூரில் அம்மா உணவகம் மூடப்படவில்லை என மாநில அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் விளக்கமளித்துள்ளார்.

உண்மை நிலை தெரியாமல் திரு எடப்பாடி பழனிசாமி கருத்துகளைத் தெரிவித்துள்ளதாக திரு தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

<<<<>>>>

சர்வதேச கடலோர தூய்மை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமை இந்த தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

பெருங்கடல்கள் மற்றும் நீர்வழிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் கடலோர காவல் படை சார்பில் தூய்மைப் பணி நடைபெற்று வருகிறது. இந்நாளையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கடலோர காவல் படையின் தென் மண்டல ஐஜி திரு டோனி மைக்கேல் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறையால் நிர்வாகம் எளிதாவதுடன் செலவு குறையும் என பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருப்பதி போன்ற புனித தலங்களில் கொடுக்கப்படும் பிரசாதங்களில் கலப்படம் செய்திருப்பது மிகவும் கவலை அளிப்பதாக தெரிவித்தார்.

நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே கோவில்களில் நிர்வாகப் பணிகளில் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மத்திய அரசு தமிழகத்துக்கு எதுவும் செய்யவில்லை என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த திமுக முயல்வதாகவும் அது உண்மை இல்லை எனவும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.

<<<<>>>>

பழனி பஞ்சாமிர்தம் தயாரிக்க ஆவின் நிறுவனத்தின் நெய்யே பயன்படுத்தப்படுகிறது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

திருப்பதி லட்டு சர்ச்சையை தொடர்ந்து, பழனி பஞ்சாமிர்தம் தொடர்பாக சமூக வலைதளங்களில் வெளியான தகவல்களை அடுத்து அறநிலையத்துறை இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

சர்ச்சைக்கு உள்ளான நிறுவனத்திடம் இருந்து நெய் வாங்கப்பட்டதாக பரவிய தகவலில் உண்மை இல்லை என அறநிலையத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

எதிர்மறை சக்திகளுக்கு எதிராக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என தமிழக ஆளுநர் திரு ஆர்என் ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற இலக்கிய திருவிழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், வளரச்சியடைந்த இந்தியா என்ற அரவிந்தரின் கனவை நனவாக்க பிரதமர் திரு நரேந்திர மோடி பணியாற்றி வருவதாக கூறினார்.

ஒவ்வொருவரும் தேசத்துக்கான கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என அவர் கூறினார்.

ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைக்கும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக மக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று திரு ஆர்என் ரவி அறிவுறுத்தினார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

புலாசன் புயல் காரணமாக சீனாவின் ஷாங்காய் பகுதியில் கனமழை பெய்து வருவதை அடுத்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

அந்தமானில் 21 தீவுக் கூட்டப் பகுதியில் நீச்சலில் ஈடுபட்ட கடலோரக் காவல் படையினர் 11 பேரை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் புதுதில்லியில் நேற்று கௌரவித்தார்.

<<<<>>>>

அஸ்ஸாமின் குவஹாத்தியில், கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு திட்டங்களை வடகிழக்க மாநிலங்கள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திரு சுகந்தா மஜூம்தார் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மத்திய உணவுத்துறை செயலாளர் திரு. சஞ்சீவ் சோப்ரா சென்னை நங்கநல்லூரில் உள்ள பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

நெல்லை அரசு சித்த மருத்துவக்கல்லூரியில் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு பங்கேற்று 102 மாணவ, மாணவிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

<<<<>>>>

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனைய பகுதியில் 17 கோடி ரூபாய் செலவில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க ஒப்புதல் அளித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அரசின் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவது தொடர்பாக மாவட்ட வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் விழுப்புரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல்லில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி உமா தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை சார்பில் பெண்களுக்கான இணையவெளி பாதுகாப்பு என்ற தலைப்பில் நடைபெற்ற குறும்பட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு சுந்தரவதனம் பரிசுகளை வழங்கினார்.

<<<<>>>>

திருப்பத்தூரில் அரசின் நலத்திட்டப்பணிகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் தணிக்கை குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

<<<<>>>>

சென்னை திருவல்லிக்கேணி நடுக்குப்பம் பகுதியில் மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடி, கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தை மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

<<<<>>>>

சென்னையில் மேற்கொள்ளப்பட்ட தெருநாய்கள் கணக்கெடுப்புப் பணிகள் தொடர்பான அறிக்கையை, உலகளாவிய கால்நடை மருத்துவ சேவைகள் நிறுவன இயக்குநர் டாக்டர் கார்லெட் ஆனி ஃபெர்ணான்டஸ், மேயர் திருமதி பிரியாவிடம் சமர்ப்பித்தார்.

<<<<>>>>

சென்னையில் குடிநீர் வாரியத்துக்கு இந்த அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய வரியை இம்மாதம் 30-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கூறியுள்ளது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் புள்ளிப் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 9வது சுற்றில் உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை இந்தியா டிரா செய்தது.

புள்ளிகள் அடிப்படையில் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

மகளிர் பிரிவு 9வது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவுடனான ஆட்டத்தை இந்திய அணி டிரா செய்தது.

மகளிர் பிரிவில் இந்தியா புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

<<<<>>>>